**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

8069821

C

1. District : Madurai
மாவட்டம்
PS: V & AC
காவல்நிலையம்
Year 2020
ஆண்டு
FIR No. 3/2020
மு.த.அ. எண்
Date 11.02.2020
நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 Sections பிரிவுகள்: 13(1)(d) R/w 13(2)
(ii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 109, 120(B), 409, 420,
(iii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 468, 471 IPC r/w 34 IPC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : —

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : During the year
நாள் முதல்
Date to :
நாள் வரை

Time Period :
நேர அளவு
Time from : 2015
நேரம் முதல்
Time to : 2016
நேரம் வரை

(b) Information Received at PS. Date : 11.02.2020
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : 0830 hrs.
நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 11.02.2020
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : 0830 hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : written type.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: RTO office, Madurai North. North-East - 3 km
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : —
முறைக் காவல் எண்
(b) Address : —
முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : K. Kumaraguru
குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : R. Karuppiah.
தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 20.12.74
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : —
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : —
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : —
வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Inspector of Police
தொழில்
(g) Address : Vigilance and Anti-Corruption, Madurai.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
(1) Tr. K. Kalyankumar RTO Sivagangai, formerly RTO Madurai North (2) Tmt. J. Poormalatha, MVI-Gr.I Paramakudi unit office, formerly MVI Gr.I Madurai North, (3) Tr. A.K. Murugan, RTO Thiruchankodu, formerly MVI-Gr.I, Madurai North, (4) Tr. D. Narayanan (5) Tr. N. Monoj (6) Tr. M. Sambathkumar and (7) Tr. P. Senthilkumar.

8. Reasons for delay in reporting by the complainant / Informant.
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
Based on the findings of DE 34/2017/TPT/MU, This case was registered. Hence no delay.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Typed content in page no. 3 to 8 is enclosed herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. M. Sathyaseelan Rank DSP, VAC to take up the Investigation / Refused Investigation / transferred to PS Madurai ..........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 11/2/2020.

[signature] 11/2/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 11.02.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 10.00hrs.

Name: பெயர் K. Kumaraguru,
Rank: நிலை Inspector No. எண் VAC
Madurai.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

குற்ற அலுவலர்கள்:

1) திரு. K. கல்யாணகுமார்,
வட்டார போக்குவரத்து அலுவலர்,
முன்னாள் வட்டார போக்குவரத்து அலுவலர் மதுரை (வடக்கு),
மதுரை மத்திய வட்டார போக்குவரத்து அலுவலர், மதுரை.

2) திருமதி. J.பூர்ணலதா,
மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I,
முன்னாள் வட்டார போக்குவரத்து அலுவலர் மதுரை (வடக்கு),
மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், திருமங்கலம், மதுரை.

3) திரு. A.K. முருகன்,
மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I,
முன்னாள் வட்டார போக்குவரத்து அலுவலர் மதுரை (வடக்கு),
மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

தனியார்கள்

4) திரு. நாராயணன்,
த/பெ. துரைப்பாண்டி நாடார்,
17, செங்கப்ப கோனார் வீதி,
சுந்தராபுரம், கோயமுத்தூர் மாவட்டம்.

5) திரு. மனோஜ்,
த/பெ. நாராயணன்,
17, செங்கப்ப கோனார் வீதி,
சுந்தராபுரம், கோயமுத்தூர் மாவட்டம்.

6) திரு. சம்பத்குமார்,
த/பெ. முனியப்பன்,
2G, ஹனிவெல் அபார்ட்மெண்ட்,
பெருந்துறை ரோடு, ஈரோடு மாவட்டம்.

7) திரு. செந்தில்குமார்,
த/பெ. ராமசாமி,
14/41, புதிய காலனி,
பணிக்கம்பட்டி (அஞ்சல்),
குளித்தலை (தாலுகா),
கரூர் மாவட்டம்.

விழிப்பு ஆணையாளர், சென்னை அவர்களின் U.O. Note எண். 3335/VC-III/2019-1, நாள்: 18.07.2019 மற்றும் அரசாணை (டி) எண். 1088 உள்(போக்குவரத்து.2) துறை, நாள்: 19.09.2019 இணைக்கப்பட்டு, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமூனா எண். DE34/2017/TPT/MU, நாள்: 03.10.2019 மூலம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கிடைக்கப்பெற்ற உத்தரவின் பேரில் இன்று 11.02.2020 -ம் தேதி 08.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 03 /2020, பிரிவுகள் 109, 120(B), 409, 420, 468, 471 இ.த.ச., உ/இ 34 இ.த.ச., மற்றும் 13(1)(d) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு அதன் தகவல்கள் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. மார்ஜினில் கண்ட குற்ற அலுவலர்கள் 1)திரு.K. கல்யாணகுமார், வட்டார போக்குவரத்து அலுவலர், 2) திருமதி. J.பூர்ணலதா, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, 3) திரு. A.K. முருகன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I ஆகியோர்கள் ஊ.த.க. சட்டம் 1988 பிரிவு 2(c) -ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

மதுரை வடக்கு வட்டார போக்குவரத்துஅலுவலகத்தில் தற்காலிக மற்றும் நிரந்தர பதிவு செய்த போது திரு.கல்யாண குமார் அவர்கள் வட்டார போக்குவரத்து அலுவலராக 09.12.2013 முதல் 23.03.2017 வரையிலும் திருமதி.பூர்ணலதா அவர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை -1-ஆக 06.04.2015 முதல் 11.09.2017 வரையிலும் மற்றும்

திரு.A.K.முருகன் அவர்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக 25.03.2015 முதல் 03.03.2016 வரை பணிபுரிந்து உள்ளார்கள். மேலும் போக்குவரத்து வாகனம் இரண்டு வகைப்படும். 1. பயணிகள் போர்டு வாகனம் 2. சொந்த போர்டு வாகனம் ஆகும். இதில் பயணிகள் மற்றும் பொருட்கள் பொதுமக்களுக்காக பயன்படும் வாகனம் பயணிகள் போர்டு வாகனம் (T.Board Vehicle) ஆகும். தனிநபர் மற்றும் ஒரு குடும்ப உபயோகத்திற்கு பயன்படுத்தப்படும் வாகனம் சொந்த போர்டு வாகனம் (Own Board Vehicle) ஆகும். இதில் பயணிகள் போர்டு வாகனம் ஐந்து வகைப்படும். 1.நிலைவண்டி (Stage Carriage) 2.பொருட்கள் ஏற்றி செல்லும் வாகனம் (goods carriage) 3.ஒப்பந்த வண்டி ( Contract Carriage) 4.தனியார் சேவை வாகனம் (Private Service Vehicles) மற்றும் கல்வி நிறுவன வாகனம் (Educational Institute of Vehicles) ஆகும். இதில் ஒப்பந்த வண்டி (Contract Carriage) நான்கு வகைப்படும். அவை 1.ஆட்டோ ரிக்ஷா, இருக்கைகள் 4 (1+3) 2. சுற்றுலா டாக்ஸி, இருக்கைகள் 6 (1+5) (i) மோட்டார் வாடகை (ii) மீட்டர் டாக்ஸி (iii) சுற்றுலா டாக்ஸி (iv) அனைத்து இந்திய சுற்றுலா டாக்ஸி 3. மேக்ஸி கேப் வாகனம், இருக்கைகள் 13 (1+12) மற்றும் 4. ஓம்னி பஸ் 13 இருக்கைகளுக்குமேல் 36 இருக்கைகளுக்குள் உள்ளதாகும். புரோட்டோ வகை வாகனங்கள் மேக்ஸி கேப் வாகனமாக பதிவு செய்ய அரசின் அனுமதி உள்ளது. ஆனால் Chassis -ல் கூண்டு கட்டி மேக்ஸி கேப் வாகுனமாக பதிவு செய்ய அரசின் அனுமதி கிடையாது. மேலும் புரோட்டோ வகை மற்றும் Chassis வகை வாகனங்களை பதிவு செய்ய மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் புனேவில் உள்ள ARAIURDE மற்றும் டெல்லியில் உள்ள ICAT -யால் சோதனை செய்து சான்று வழங்கிய பின்னர் மத்திய அரசு அனுமதி பெற்று அதன்பின்னர் மாநில அரசு மற்றும் போக்குவரத்து ஆணையர் ஆகியோர்களால் பதிவு அங்கிகாரம் வழங்கப்பட்ட பின்னரே வாகனம் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும் இந்த விசாரணையின் வாகனமான TATA/407/SFC/31/BS-III, Bus Chassis-ன் மீது கூண்டு கட்டி மேக்ஸி கேப் வாகனமாக பதிவு செய்ய முதன்மை செயலாளர்/ போக்குவரத்து ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.48924/HA2/2017, நாள்.12.12.2017 -ன்படி (ஆவண எண். 1) அரசால் அங்கீகாரமோ அல்லது அனுமதியோ வழங்கப்படவில்லை.

<u>பதிவு செய்ய தேவையான ஆவணங்கள்:</u>

1.சம்பந்தப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலரிடம் இருப்பிட சான்றுடன் மனு அளிக்கவேண்டும்.

2. வட்டார போக்கு வரத்து அலுவலர் தற்காலிக மற்றும் நிரந்தர பதிவு செய்ய கால அளவுகள் குறிப்பிட்டு Proceedings பிறப்பிக்க வேண்டும்.

3. Proceedings-யுடன் பாரம்- 20, பாரம்-21, பாரம் -22, உற்பத்தியாளர் விலைப்பட்டியல், டீலர் விலைப்பட்டியல், வாகன காப்பீடு, பாரம்-60, இருப்பிட சான்று விற்பனை கடிதம் ஆகியவை இணைக்கப்படவேண்டும்.

**பதிவு செய்யும் முறை :-**

மோட்டார் வாகன ஆய்வாளர் அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து முறையாக இருந்தால் தற்காலிக பதிவு செய்யவேண்டும். Chassis-ன் மீது கூண்டு கட்டிய வாகனமாக இருந்தால் அளவீடு செய்து அளவுகளை படிவம் -20 -ல் எழுதி நிரந்தர பதிவு செய்ய வேண்டும்.

**வரி நிர்ணயம் செய்யும் முறை:-**

மேக்ஸி கேப் வாகனத்தின் தரைதள பரப்பு ஆறு சதுர மீட்டருக்கு மேல் இருந்தால் லைப் டைம் வரி வசூல் செய்யவேண்டும். ஆனால் மேக்ஸி கேப் வாகனத்தின் விலை ரூ.10,00,000/-ற்குள் இருந்தால் லைப் டேக்ஸ்சாக வாகன மதிப்பில் 10% வரி வசூல் செய்ய வேண்டும். அதுவே வாகனத்தின் விலை ரூ.10,00,000/- ற்கு மேல் இருந்தால் லைப் டைம் டேக்ஸ்சாக வாகன மதிப்பில் 15% வசூல் செய்யவேண்டும். அதே போல் ஆம்னி பேருந்துக்கு தரைதள பரப்பின் ஒரு ச.மீட்டருக்கு ரூ.4,900/- வீதம் ஒவ்வொரு காலாண்டிற்கும் வசூல் செய்ய வேண்டும். மேலும் மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 2015-2016-ம் ஆண்டில் TATA SFC 407/31, BS-III, Bus Chassis -ஐ தனியாக விலைக்கு வாங்கி அதன் மீது கூண்டு கட்டி மேக்ஸி கேப் வாகனமாக சுமார் 204 வாகனங்கள் நிரந்தர பதிவும் 170 வாகனங்கள் தற்காலிக பதிவும் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வாகனங்கள் பதிவு செய்ய வட்டார போக்குவரத்து அலுவலர் அவர்களின் பணியானது கால அளவுகள் குறிப்பிட்டு செயல்முறை ஆணை பிறப்பிக்க வேண்டும். மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்கள் தற்காலிக பதிவின்போது தங்களிடம் ஆஜர்படுத்தப்படும் ஆவணங்களை சரிபார்த்து வாகனத்தை ஆய்வு செய்து படிவம் -20-ல் வாகன வகுப்பு, வாகன வகை, வாகனத்தின் Body வகை இருக்கை திறன், எடை ஆகியவற்றை சரிபார்த்து ஆய்வு சான்றிழ் கையொப்பம் செய்யவேண்டும். மேலும் கூண்டு கட்டிய பின்னர் நிரந்தர பதிவின் போதும் மோட்டார் வாகன ஆய்வாளர் மேற்சொன்ன விவரங்களை சரிபார்ப்பதுடன் வாகனத்தின் மொத்த நீளம், மொத்த அகலம், மொத்த உயரம் மற்றும் Over hang ஆகியவற்றை அளவீடு செய்து அதன் அளவுகளை படிவம்-20-ல் குறிப்பிடவேண்டும். TATA SFC 407/31, BS-III, Bus Chassis -ல் கூண்டு கட்டி மேக்ஸி கேப் வாகனமாக மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்களை ஆய்வு செய்ய மதுரை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சுரேஷ் தலைமையில் மேலாய்வு செய்யப்பட்ட போது TN-59-BJ-4126, TN-59-BJ-8340, TN 59-BK-6357 TN-59-BJ-4645, TN-59-BJ-4713 மற்றும் TN-59-BK-3576 ஆகிய மேக்ஸி கேப் வாகனங்களில் ஒட்டுநர் இருக்கையுடன் சேர்த்து 13 இருக்கைகளுக்கு மேலாகவும் 36 இருக்கைகளுக்கு உள்ளாகவும் காணப்பட்டது. மேலும் ஆய்வு செய்யப்பட்ட 6 வாகனங்களிலும் அனுமதிக்கப்பட்ட அசல் Chassis-ன் வலது பக்கம் அளவு செய்தபோது அனுமதியின்றி சுமார் 0.50 மீட்டர் முதல் 0.55 மீட்டர் வரை கூடுதலாக

முன்புறம் நீட்டிக்கப்பட்டு, நீட்டிக்கப்பட்ட Chassis -ல் ஸ்டேரிங் பாக்ஸ் இணைக்கப்பட்டிருந்தது. அதேபோன்று 6 வாகனங்களிலும் சுமார் 0.50 மீட்டர் நீளத்தில் ஸ்டேரிங் லிங்கேஜஸ் கம்பி அனுமதியின்றி அதிக அளவில் இணைக்கப்பட்டுள்ளது. Chassis - ன் Original position -ல் இருந்து முன்பக்கம் இருபுறத்திலும் ஒரு குறிப்பிட்ட மீட்டர் நீளத்திற்கு mild steel - லால் weld வைத்து Chassis நீட்டிக்கபட்டிருப்பது Unauthorised Chassis alteration ஆகும். ஒவ்வொரு வாகனத்தின் ஒவ்வொரு variant -க்கும் even brand name மாறியிருந்தால் கூட தனியாக ஒவ்வொரு வாகனத்திற்கும் அரசிடமிருந்து வாகன வகைக்கான அங்கீகாரம் பெறப்பட வேண்டும். ஆனால் மேலாய்வு செய்யப்பட்ட 6 மேக்ஸி கேப் வாகனங்களுக்கும் மேலே சொல்லப்பட்ட மாற்றங்கள் செய்ததற்கான CMVR 126-ல் AIS-017/2000 -ன்படி அரசிடம் வாகன வகைக்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. ஆய்வு செய்யப்பட்ட TATA SFC 407/31-BS-III bus chassis -ல் கூண்டு கட்ட்டப்பட்ட 6 வாகனத்தில் 13 இருக்கைக்கு மேல் 36 இருக்கை உள்ளதால் ஆம்னி பேருந்தாக பதிவு செய்யலாம். அவ்வாறு ஆம்னி பேருந்தாக பதிவு செய்யப்படும் பட்சத்தில் ஒரு காலாண்டிற்கு தரைத்தள பரப்பிற்கு (floor Area) ஒரு சதுர மீட்டருக்கு Rs.4,900/- வீதம் வரி வசூல் செய்யப்படவேண்டும். ஆய்வு செய்யப்பட்ட ஆறு வாகனங்களுக்கும் வாகனங்களின் தரைதள பரப்பை பொறுத்து காலாண்டிற்கு ஒரு முறை என 15 ஆண்டுகளுக்கு மொத்தம் ரூ.2,14,47,300/- கீழ்கண்ட அட்டவணையின் படி வரி வசூலிக்கப்பட வேண்டும்.

| வ. எண் | பதிவு எண் | தரைத்தள பரப்பு (ச.அடி) | காலாண்டு வரி | ஓராண்டு வரி | 15 ஆண்டு வரி |
|---|---|---|---|---|---|
| 1. | TN-59-BJ-4126 | 12.20 | Rs.59,780/- | Rs.2,39,120/- | Rs.35,86,800/- |
| 2. | TN-59-BJ-4713 | 12.20 | Rs.59,780/- | Rs.2,39,120/- | Rs.35,86,800/- |
| 3. | TN-59-BJ-3576 | 12.45 | Rs.61,005/- | Rs.2,44,020/- | Rs.36,60,300/- |
| 4. | TN-59-BJ-8340 | 11.85 | Rs.58,065/- | Rs.2,32,260/- | Rs.34,83,900/- |
| 5. | TN-59-BJ-6357 | 12.15 | Rs.59,535/- | Rs.2,38,140/- | Rs.35,72,100/- |
| 6. | TN-59-BJ-4645 | 12.1 | Rs.59,290/- | Rs.2,37,160/- | Rs.35,57,400/- |
| | | | | மொத்தம் | Rs.2,14,47,300/- |

ஆய்வின் போது வாகனங்களின் தரைதள பரப்பை சதுர மீட்டரில் தெரிந்து கொள்ள வாகனத்தின் உள் பக்கம் உள்ள நீளம் மற்றும் அகலத்தை அளவீடு செய்ததில் 6 வாகனங்களுக்கும் தரைதள பரப்பு 11.85 ச.மீ முதல் 12.45 ச.மீ வரை இருந்தது. ஆய்வு செய்யப்பட்ட ஆறு வாகனங்களும் ஆம்னி பேருந்தாக பதிவு செய்யும் பட்சத்தில் 15 ஆண்டுகளுக்கு மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட்ட ஆயுட்கால வரியை கழித்து மீதம் ரூ.2,09,04,586/- வரியாக கீழ்கண்ட அட்டவணையின் படி வசூல் செய்ய வேண்டும்.

| வ. எண் | பதிவு எண் | 15 ஆண்டு வரி | வசூல் செய்யப்பட்ட ஆயுள் கால வரி | வசூல் செய்யவேண்டிய வித்தியாச வரி |
|---|---|---|---|---|
| 1. | TN-59-BJ-4126 | Rs.35,86,800/- | Rs.88,111/- | Rs.34,98,689/- |
| 2. | TN-59-BJ-4713 | Rs.35,86,800/- | Rs.95,880/ | Rs.34,90,920/- |
| 3. | TN-59-BJ-3576 | Rs.36,60,300/- | Rs.87,821/ | Rs.35,72,479/- |
| 4. | TN-59-BJ-8340 | Rs.34,83,900/- | Rs.86,811/ | Rs.33,97,089/- |
| 5. | TN-59-BJ-6357 | Rs.35,72,100/- | Rs.88,211/ | Rs.34,83,889/- |
| 6. | TN-59-BJ-4645 | Rs.35,57,400/- | Rs.95,880/ | Rs.34,61,520/- |
| | | | மொத்தம் | Rs.2,09,04,586/- |

இந்த விசாரணையில் குற்ற அலுவலர்கள் வாகன உரிமையாளர்களுடன் கூட்டு சேர்ந்து TATA 407 SFC/31 BS-III, என்ற வாகனத்தில் கூண்டு கட்டி மேக்ஸி கேப் வாகனமாக பதிவு செய்ய அரசால் அனுமதி வழங்கப்படாத நிலையில் போலி ஆவணங்கள் தயார் செய்தும், போலி முகவரி கொடுத்தும் அனுமதி ஏதும் பெறாமல், உற்பத்தியாளர்களால் தயார் செய்யப்பட்ட Chassis -ல் முன்புறம் நீட்டித்து மாற்றங்கள் செய்து 13 இருக்கைகளுக்கு மேல் 36 இருக்கைகளுக்குள் உள்ள வாகனத்தை ஆம்னி பேருந்தாக பதிவு செய்யாமல் மேக்ஸி கேப் வாகனமாக பதிவு செய்துள்ளார்கள். மேலும் ஒரு வாகனத்திற்கு காலாண்டிற்கு ஒரு முறை தரைதள பரப்பு (Floor Area) ஒரு சதுர மீட்டருக்கு ரூ.4,900/- யாக வரி நிர்ணயம் செய்யாமல் 15 வருடங்களுக்கு ஆயுட்கால வரியாக ஒரு வாகனத்திற்கு ரூ.86,020/- மட்டும் வரி நிர்ணயம் செய்துள்ளார்கள். மேலும் மேக்ஸி கேப் வாகனத்தின் விலை ரூ.10,00,000/-ற்கு குறைவாக இருந்தால் வாகன தொகையில் 10% வரி செலுத்த வேண்டும் என்பதற்காக ரூ.10,00,000/-ற்கு மேல் மதிப்புள்ள மேக்ஸி கேப் வாகனத்தை வாகன உரிமையாளர்கள் வழங்கிய குறைந்த மதிப்பிலான பில்களை பெற்று 10% வரி வசூல் செய்துள்ளதால் ஆய்வு செய்யப்பட்ட ஆறு வாகனங்களுக்கு ரூ.2,09,04,586/- வரை அரசுக்கு வருமான இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் 1 முதல் 7 வரை உள்ள குற்ற அலுவலர்கள் பொதுவான கெட்ட எண்ணத்துடனும் தங்களுக்குள் ஆதாயம் பெரும் எண்ணத்துடனும் குற்ற செய்கை புரிந்து அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் 1 முதல் 3 வரை உள்ள குற்ற அலுவலர்கள், 4 முதல் 7 வரை உள்ள தணியர்களின் குற்ற செய்கைக்கு உடந்தையாக செயல்பட்டுள்ளனர்.

எனவே மேற்படி எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்ய முகாந்திரம் இருப்பதால், 1 முதல் 3 வரை உள்ள குற்ற அலுவலர்களின் மீது 109, 120(B), 409, 420, 468, 471 இ.த.ச., உ/இ 34 இ.த.ச., மற்றும் 13(1)(d) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988 ஆகிய பிரிவுகளின் கீழும், 4 முதல் 7 வரை உள்ள குற்றவாளிகள்/ தணியர்கள் மீது 109, 120(B), 409, 420, 468, 471 இ.த.ச., உ/இ 34 இ.த.ச., பிரிவின் கீழும் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

எனவே மேற்படி எதிரிகளின் மீது காவல் ஆய்வாளராகிய நான் க.குமரகுரு, மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2020, ச/பி. 109, 120(B), 409, 420, 468, 471 இ.த.ச., உ/இ 34 இ.த.ச., மற்றும் 13(1)(d) உ/இ 13(2) ஊழல் தடுப்பு சட்டம் 1988-ன்படி இன்று 11.02.2020 -ம் தேதி 08.30 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

முதல் தகவல் அறிக்கையின் அசல் கனம் ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்ற நீதிபதி அவர்களுக்கும், மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

11/02/2020

(K.Kumaraguru)

**INSPECTOR OF POLICE**
**Vigilance Anti Corruption**
**MADURAI**